**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 556/2025 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | முத்துக்குமார் |
| Father Name | : | முத்துசாமி |
| Village | : | தாராபுரம் |
| Taluk | : | தாராபுரம் |
| Age | : | 22 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது தாராபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 02.08.2025 ஆம் தேதியன்று காங்கேயம் ரோட்டில் எல்லப்பாறை அருகே விபத்து நடந்ததாகவும் நடந்து சென்று கொண்டிருக்கும் நபர் மீது வாகனம் மோதியதாக கேள்விப்பட்டு தெரிந்துகொண்டேன். பின்னர் எனது சொந்த வேலை காரணமாக சென்றுகொண்டிருக்கும்போது போலீசார் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் செந்தில்குமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## <u>குறுக்கு விசாரணை</u>

விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் விபத்து நடந்த இடத்தை அ டையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். யார் சம்பவ இடத்தை அடையாளம் காட்டினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.27 17:52:38 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 556/2025 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | சண்முகம் |
| Father Name | : | பெருமாள் |
| Village | : | வெள்ளகோவில் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 53 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.07.2026

**முதல் விசாரணை**

1. நான் வெள்ளகோவில் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.ஞானப்பிரகாசம் அவர்கள் பணிமாறுதல் காரணமாக வேறு காவல் நிலையம் சென்று விட்டதால் தற்போது ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 02.08.2025 ஆம் தேதியன்று மாலை 16.00 மணிக்கு வெள்ளகோவில் காவல் நிலைய தலைமைக் காவலர் 758 திரு.பிரசாத் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது மோகன்குமார் த/பெ.குப்புசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப வெள்ளகோவில் காவல் நிலையக் குற்ற எண். 347/2025 – U/S: 281, 125(a) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பியும் அதன் நகலை புலன் விசாரணைக்காக சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. மோகன்ராஜ் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் இவ்வழக்கு கோப்பை திரு.மோகன்ராஜ் அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 02.08.2025 ஆம் தேதியன்று மாலை 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று ஆஜர் சாட்சிகள் செந்தில்குமார் மற்றும் முத்துக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் கடந்த 03.08.2025 ஆம் தேதி சாட்சிகள் மோகன்குமார், நந்தகுமார், பழனிச்சாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் கோவை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையிலிருந்து இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் குப்புசாமி என்பவரின் இறப்பு இண்டிமேசன் பெற்று, காலை 09.00 மணிக்கு இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 281, 125(a) BNS ல் இருந்து 281, 106(1) BNS ஆக சட்டப்பிரிவினை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. பின்னர் கடந்த 03.08.2025 ஆம் தேதி கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று வழக்கில் இறந்துபோன குப்புசாமி என்பவரது பிரேதத்தை பார்வையிட்டு ஆஜர் பஞ்சாயத்துகாரர்களுக்கும் சாட்சிகளுக்கும் முறைப்படி சம்மன் சார்வு செய்து சவக்கிடங்கிற்கு முன்பாக வைத்து பகல் 12.00 மணியில் இருந்து பகல் 14.00 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார். பின்னர் சாட்சிகள் கார்த்திகேயன், தேவசேனாதிபதி, குப்புசாமி, சண்முகம் மற்றும் பொன்னுச்சாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். இறந்துபோன குப்புசாமி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனைக்காக முதல் நிலைக் காவலர் 1181 திரு.கார்மேகம் என்பவர் மூலமாக மதியம் 03.30 மணிக்கு கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் அவர்களிடம் தக்க வேண்டுகோள் கடிதத்துடன் ஆஜர்படுத்தியும் பிரேத பரிசோதனைக்கு

உட்படுத்தியுள்ளார். **(இறந்துபோன குப்புசாமி என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6. பின்னர் அன்றைய தினமே சாட்சி மோகன்குமார், கோகுல், சரவணாம்பாள், கீர்த்தனா, முருகேசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர், இவ்வழக்கு கோப்பினை மேல் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.ஞானப்பிரகாசம் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார்.

7. பின்னர், இவ்வழக்கினை காவல் ஆய்வாளர் திரு.ஞானப்பிரகாசம் அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, பின்னர் கடந்த 06.08.2025 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி கோபிநாத் என்பவரை கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

8. கடந்த 13.08.2025 ஆம் தேதியன்று விபத்தை ஏற்படுத்திய TN 78 6714 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda splender வாகனத்தின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தி, மோட்டார் வாகன ஆய்வறிக்கைச் சான்றுகள் பெற்றுள்ளார். மேலும், கடந்த 19.08.2025 ஆம் தேதியன்று விபத்துக்குள்ளான TN 47 A 0632 என்ற பதிவு எண் கொண்ட TVS 50 வாகனத்தின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தி, மோட்டார் வாகன ஆய்வறிக்கைச் சான்றுகள் பெற்றுள்ளார். பின்னர் கடந்த 11.09.2025 ஆம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றுகள் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.நிர்மலாதேவி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(TN 78 6714 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda splender வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், TN 47 A 0632 என்ற பதிவு எண் கொண்ட TVS 50 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

9. பின்னர் கடந்த 11.09.2025 ஆம் தேதியன்று இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட குப்புசாமி என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து, விபத்து பதிவேடு நகல் வழங்கி மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்த காங்கேயம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.கார்த்திகேயன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் முதல் கட்ட சிகிச்சை அளித்தும் மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தும் மற்றும் விபத்து பதிவேடு நகல் வழங்கிய திருப்பூர் ஆதார் மருத்துவமனை மருத்துவர் திருமதி.சங்கீதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இறப்பு இண்டிமேசன் வழங்கிய கோவை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.விஜய் சங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் பிரேத பரிசோதனை செய்து பிரேத பரிசோதனை சான்று வழங்கிய கோவை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் கலாவதி பிரபாகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(காங்கேயம் அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கிய குப்புசாமி என்பவரின் விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.9 ஆகவும், திருப்பூர் ஆதார் மருத்துவமனை மருத்துவர் வழங்கிய குப்புசாமி என்பவரின் விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.10 ஆகவும், கோவை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் வழங்கிய குப்புசாமி என்பவரின் இறப்பு இண்டிமேசன் அ.சா.ஆ.11 ஆகவும், மற்றும் குப்புசாமி என்பவரின் பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

10. பின்னர் 11.09.2025 ஆம் தேதியன்று பிரேத வழிக்காவல் மேற்கொண்ட முதல்நிலைக் காவலர் 1181 திரு.கார்மேகம் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் 758 திரு.பிரசாத், முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மோகன்ராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 281, 106(1) BNS ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கின் புகார்தாரர் விபத்தில் இறந்த குப்புசாமி என்பவரின் மகன் என்றால் சரிதான். கண்ணுற்ற சாட்சியாக சொல்லப்படும் மோகன்குமார் மற்றும் நந்தகுமார்

ஆகியோர்கள் இருவரும் விபத்தில் இறந்த குப்புசாமியின் உறவினர்கள் என்றால் சரிதான். விபத்தில் கண்ணுற்ற சாட்சியாக தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த ரோடானது சற்று வளைவான ரோடு என்றால் சரியல்ல. சுமார் 50 அடி முன்பாக சாலை சற்று வளைவாக உள்ளது. சம்பவம் நடைபெற்றது இரவு நேரம் என்றால் சரிதான். விபத்தில் இறந்த குப்புச்சாமிக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் அதைபற்றி நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. இவ்வழக்கின் எதிரிக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.27 17:52:47 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்